பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 09 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவில் காலை 11 மணி நிலவரப்படி 26 புள்ளி ஏழு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன

2. பிரதமர் திரு.நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் தமிழகத்தில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தேசிய அளவில் ஏற்படும் பேரிடர் முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு பணிகள் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கம் இன்று சென்னையில் தொடங்கியது.

4. இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்பு, தொழில்நுட்பம், உள்ளிட்ட துறைகளில் மேற்காள்ளப்பட்டு வரும் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்த அதிகாரிகள் நிலையிலான ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

5. சீன ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாள்விகா பன்சூட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 26 புள்ளி ஏழு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

தோடா மாவட்டத்தில் உள்ள **Chenap** பள்ளத்தாக்கு, கிஸ்துவார், ராம்பன், தெற்கு காஷ்மீர் பகுதியில் உள்ள **Anantnag, Pulwama, Shopian** மற்றும் **Kulgam** மாவட்டங்களில் உள்ள 24 சட்டப்பேரவை தொகுதிகளில் இந்த வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

உதாம்பூர், தில்லி ஆகிய இடங்களில் உள்ள 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காஷ்மீரி பண்டிட்கள் வாக்களிக்க ஏதுவாக ஜம்முவில் 19 வாக்குச்சாவடிகளும், உதாம்பூரில் ஒரு வாக்குச்சாவடியும், தில்லியில் 4 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

இன்றைய தேர்தலில் 219 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

23 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பபட்டுள்ளது.

தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஜம்மு-கஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மூவாயிரத்து 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அவை 100 சதவீதம் இணையதளம் மூலம் கண்காணிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இரண்டாவது கட்டமாக 26 தொகுதிகளில் வரும் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாக 40 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் எட்டாம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 3வது மற்றும் இறுதிகட்ட தேர்தலில் 415 வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள கடைசி நாளான நேற்று 34 வேட்பாளர்கள் தங்களது மனுக்களை விலக்கிக் கொண்டுள்ளனர்.

>>>>>><<<<<

குஜராத் மாநிலம், காந்திநகரில் நடைபெற்று வரும் நான்காவது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாட்டின் நிறைவு நாளான இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கலந்து கொள்கிறார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, வரும் ஆறு ஆண்டுகளில் நிறைவேற்றப்படவுள்ள புதிய எரிசக்தி திட்டங்கள் குறித்து அரசு துறை அதிகாரிகளுடன். தனியார் துறையினர் ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவித்தார்.

மாற்று எரிசக்தி துறையில் இந்தியா, உலக நாடுகளுக்கு முன்னோடியாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் தமிழகத்தில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாயும்,, ரயில்வே துறைக்கு 6 ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட இரண்டு வந்தேபாரத் ரயில்களையும் சேர்த்து மொத்தம் 9 சொகுசு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 66 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தின் கீழ், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் சார்பில் இதுவரை 7 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நகர்ப்புறங்கள் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இந்த இயக்கத்தை செயல்படுத்துவதற்கென கள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்த இந்த மரம் நடும் திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு அமைச்சகம் முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த மாதம் 2வது வாரம் முதல் படிப்படியாக இப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பாக மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் நேற்று முதல் தொடங்கப்பட்டுள்ள, தூய்மையே சேவை இயக்கத்தை நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு வார காலத்தில் அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தில் கூடுதலாக மரக்கன்றுகளை நடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தேசிய அளவில் ஏற்படும் பேரிடர் முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு பணிகள் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கம் இன்று சென்னையில் தொடங்கியது

பாதுகாப்புத்துறையின் தென்பிராந்திய ராணுவ மையம், மத்திய உள்துறை அமைச்சகத்தின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் உள்ளிட்ட 36 துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் இந்த கருத்தரங்கில் முக்கிய உரையாற்றுகின்றனர்.

வானிலை முன்னறிவிப்பு, கடல் ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டு தொழில்நுட்பம் தொடர்பான விவரங்களை எடுத்துரைக்கவுள்ளனர்.

இந்த கருத்தரங்கில் தொடக்கவுரையாற்றிய தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் திருமதி. அமுதா, தமிழகத்தை தாக்கிய புயல்களின் போது, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து, பேரிடர் காலத்தின் போது பணியாற்றுவதாக குறிப்பிட்ட அவர், கடலோர மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்ட போதிலும், உடனடியாக அதிலிருந்து மீள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

எனினும், பேரிடர்களை முன்கூட்டியே துல்லியமாக அறிவதற்கான தேவை உள்ளதாகவும், கூடுதலாக ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் திருமதி. அமுதா குறிப்பிட்டார்.

>>>>>><<<<<

நாகப்பட்டினத்தில் உள்ள தமிழ்நாடு மீன்வள பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது.

இதில் தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 332 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

>>>>>><<<<<

இந்தியா – அமெரிக்கா இடையே பாதுகாப்பு, தொழில்நுட்பம், விண்வெளித்துறை ஒத்துழைப்பு, தூய்மை எரிசக்தி ஆகிய துறைகளில் மேற்காள்ளப்பட்டு வரும் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்த அதிகாரிகள் நிலையிலான ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது

இந்திய தரப்பில் இரண்டு வெளியுறவுத்துறை அதிகாரிகளும், அமெரிக்க தரப்பில் இரண்டு அதிகாரிகளும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மண்டல மற்றும் சர்வதேச அளவிலான விஷயங்கள் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

இந்திய – அமெரிக்க ஒத்துழைப்பு குறித்து அமைச்சர்கள் நிலையில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு முன்னோடியாக அதிகாரிகள் நிலையில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

ஆந்திரப்பிரதேச மாநிலம், விஜயவாடாவில் மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒட்டுமொத்த நிவாரணத் திட்டத்தை முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

விஜயவாடா நகரில் உள்ள 32 வார்டுகளில் கடுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளை சரி செய்வதற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

மேலும், முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<

இந்திய பங்குச்சந்தைகள் இன்று காலை வர்த்தகம் தொடங்கிய போது, சரிவை சந்தித்தன.

உலக பங்குச்சந்தை நிலவரத்திற்கேற்ப அதிக அளவில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்குகள் விற்பனைக்கு வந்ததை அடுத்து, பங்குச்சந்தைகள் சரிவை சந்தித்துள்ளன.

>>>>>><<<<<

சீன ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாள்விகா பன்சூட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**Changzhou-**வில் நடைபெற்று இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 26-24, 21-19 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Gregoria Mariska-**வை வென்றார்.

>>>>>><<<<<

ஆஸ்திரேலிய சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<